# ஆத்ம ஜோதி



பகவான் சுவாமி சிவானந்தர்.



# ★ ஆத்ம ஜோதி ★

[ ஓர் ஆத்மீக மாத வெளியீடு ]

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.—சுத்தானந்தர்.


| சோதி 12 | சார்வரி ௵ புரட்டாதி ௴ 1-ந் ௳ (16-9-60) | சுடர் 11 |
|---|---|---|


## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அழியா வாழ்வு | 321 |
| 2. | பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி | 322 |
| 3. | தெய்வீக வாழ்வு | 323 |
| 4. | சிவானந்தர் அருள்மொழிகள் | 326 |
| 5. | மகான்களின் மகிமை | 329 |
| 6. | அன்பு | 335 |
| 7. | சுத்தானந்தரின் கடிதம் | 336 |
| 8. | வாழ்க தெய்வீக வாழ்க்கைச் சங்கம் | 338 |
| 9. | எனது யப்பான் தேசத்துப் பிரயாண அநுபவங்கள் | 339 |
| 10. | இன்புற்று வாழும் வழி | 346 |
| 11. | வழிகாட்டும் ஜோதி | 348 |


## ஆத்ம ஜோதி சந்தா விபரம்.


ஆயுள் சந்தா ரூ. 75-00, வருடச் சந்தா ரூ. 3-00
தனிப்பிரதி சதம் 30.

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்.
பதிப்பாசிரியர்; நா. முத்தையா,

"ஆத்ம ஜோதி நிலயம்" நாவலப்பிட்டி. (சிலோன்.)

# அழியா வாழ்வு.

(சுவாமி சிவானந்த சரஸ்வதி)

அமர ஆத்மனில் நின்றே வாழ்தலும்,
ஆத்மனின் னமுதை இனிமையாய் நுகர்தலும்,
ஈசனை யென்றும் வழிபட்டு நிற்றலும்,
இறைவன் நாம மந்திரம் ஜெபித்தலும்,
அவர்தம் புகழை இனிதா யுரைத்தலும்,
அவரைக் கணமும் மறவாது நினைத்தலும்,
இயமநி யமங்களை ஒழுங்காய்க் கற்றலும்,
ஏழைக் குதவியை விழைந்தே செய்தலும்,
வேத நூற்களை யோதியே கேட்பதும்,
சிந்தனை செய்தே நன்கா ராய்தலும்,
குருவிற் கரும்பணி யாற்றியே வாழ்தலும்,
அவர்தம் மொழிகளைக் கேட்டு நடத்தலும்,
பொதுநல ஊழியம் புரிந்தே செய்வதும்,
தானடங் கியென்றும் தனிமையாய் வாழ்தலும்,
மனதையும் புலனையும் அடக்கியே வாழ்தலும்,
பிராணா யாமமும் பழகியே வருதலும்,
பிரம்ம விசாரணை செய்தே வாழ்வதலும்,
நியமங்க ளதனை யொட்டியே நிற்றலும்,
ஓங்கா ரமதனில் நின்றே வாழ்தலும்,
ஓங்கார தொனியை தொனித்தே வாழ்தலும்,
ஓங்கார சிந்தனை செய்தே வாழ்தலும்,
அவரவர் ஆத்மனை அவரவர் அறிதலும்,
எங்குமே ஒருஆத் மாவையே காண்பதும்,
பிரம்ம ஞானம் பெற்றே நிற்பதும்,
நாம ரூப மகற்றியே வாழ்தலும்,
அகத்திற் புதைந்த அமுதை யுண்பதும்,
அழியா அமர இன்ப மடைதலும்
அழியா வாழ்வு அமர வாழ்க்கை
உண்மை வாழ்க்கை அழியா வாழ்வு!

# பாரத மாதா திருப்பள்ளியெழுச்சி.

(வ. ஜம்புநாதன்)

ஓதிய னுதித்தான் அஞ்ஞான
இருட்கணம் யாவும் சிவானந்த
மாதவ னருளொளியா லகன்று
பரவொளி யெங்கும் பரவிற்று!
வேதமு முயர்கீதையும் ஓதியே
யுனையாம் வணங்கி நிற்கின்றனம்,
தாதுகு மலருடையாய்! பாரத
மாதா பள்ளியெழுந் தருள்வாய்!

வெற்றிதனை யுணர்த்தியே கூவின
சேவல் குருகுகள் இயம்பின
தெற்றன சங்கங்கள் முழங்கின
தென்றலும் பிரணவ ஒலி ஒலிக்குது
நற்றவ சிவானந்தர் அன்ப
ரகமாம் அரவிந்தம் அரும்பின்
கற்றவர் புகழத்திகழ் பாரத
மாதா பள்ளி யெழுந்தருள்வாய்!

மன்னும் சீர்சிவாவின் தலைமையில்
ஆசன மேபயில்வோர் ஓர்பால்
இன்னிசை பாக்களையே யினிதா
யியம்பி தோத்தரிப்போர் ஓர்பால்
மந்திரமுஞ் செப்புவோர் ஓர்பால்
நிட்டையி லமர்ந்திடுவோர் ஓர்பால்
அன்னையே! அம்பிகையே! பாரத
மாதா பள்ளி யெழுந்தருள்வாய்!

முருகே தவழுநற் சோலையில்
வண்டுகள் ரீங்காரம் செய்தன
மருகிய நன்மலர்களும் மலர்ந்தன
ககனத் தாரகையும் மறைந்தன
குருவர சிவானந்தர் மொழிவதும்
கேட்குது நமசிவாய வெனவே!
அருள்சுரந் தெமையாட்கொள பாரத
மாதா பள்ளி யெழுந்தருள்வாய்!

# ★ தெய்வீக வாழ்வு. ★

(ஆசிரியர்)

★

மனிதரில் பலவகை. உருவத்தினால் அல்ல; உள்ளத்தினால். மனிதரில் விலங்கு; மனிதரில் மனிதன்; மனிதரில் தேவன். ஒருநூறு பசுக்களைப் பரிசோதித்தால் தொண்ணூறு வீதம் பசுக்குணமே காணப்பெறும். ஒருநூறு புலிகளைப் பரிசோதித்தாலும் அங்ஙனமே. ஒருநூறு மனிதரைப் பரிசோதித்தால் இரண்டு மனிதர் ஒன்றுபோல் இல்லை. இது மனித இயல்பில் காணப்படும் விசித்திரம்.

மனிதன் தேவநிலை அடையவே பிறந்தான். வந்த கருமத்தை மறந்து விட்டான். விலங்கு நிலையிலிருந்தே மனித நிலைக்கு வந்தான். மறுபடியும் பழைய வாசனை அவனைத் தாக்குகின்றது, கீழ்நிலைக்கு மிகக்கெதியில் இழுபட்டு விடுகின்றான். தேவ நிலைக்கு உயருவது அரிது. மிருக நிலைக்கு இறங்குவது வெகு சுலபம். அரியது எதுவோ? அதனைச்செய்கின்றானில்லை, "செயற்கரிய செய்வர் பெரியர்" என்று தமிழ்மறை முழங்குகின்றது. பெரியவனாக வரவேண்டும் என்று ஆசைப்படுகின்றான். அதற்கான முயற்சிதான் அவனிடம் காணப்படுவதில்லை.

மனிதன் தெய்வீக வாழ்வு வாழ்வதற்கு சுவாமி சிவானந்தர் அவர்கள் நான்கே நான்கு வார்த்தைகளில் வழி காட்டுகின்றார்கள். 'அன்பு செய்.' 'சேவை செய்.' 'தியானம் பயில்' 'அனுபூதி யடை.' உலகில் வாழும் உயிரினங்களுக்கெல்லாம் அன்பு பொதுவாகும். அன்பிற்குச் சாதி, சமய, பெரியோர், சிறியோர் ஆதிய எவ்வித வேறுபாடும் இல்லை. எவ்வுயிருந் தம்முயிரென நினைக்கும் அருள் நிலைக்கு உயர்த்துவது அன்பே. பிறர் உன்னிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று நீ விரும்புகின்றாயோ, அப்படி மற்றவர்களிடம் முதலில் நீ நடந்துகொள்ளக் கற்றுக்கொள். அதுவேதான் அன்பு.

பிற உயிரும் தன் உயிரே; தனக்குத் துன்பம் இருப்பது போல்தான் மற்றவருக்குந் துன்பம் உண்டு; தான் இன்பம் அனுபவிப்பதை விரும்புவது போல்தான் மற்றையோரும் விரும்புவர்; தனக்குப் பசி உண்டாவது போலவே மற்றைய உயிர்களுக்கும் பசி உண்டு; என்பதை உணர்பவன் பிற ஜீவர்களுக்கு எவ்வாறு சேவை செய்யாமலிருக்க முடியும்? பிற உயிருக்கும் தனக்குமுள்ள தொடர்பைச் சிந்தித்து உணராமையினலேயே மனிதன் சேவை செய்ய மறந்து விடுகின்ருன். சேவை அகங்கார மமகாரத்தை அழிக்கின்றது. இறைவன் எங்கும் நிறைந்துள்ளான் என்பதை உணர்த்துகின்றது. சீவ சேவையே, சிவ சேவை. உயிர்களுக்கு அந்நியமாக இறைவன் வேறு இடத்தில் எங்குமில்லை. சீவனின் இருப்பை உணர்ந்தவனே சிவனின் இருப்பை அணுகுகின்ருன். ஓசை ஒலியெலாம் நிறைந்த இறைவன் ஜீவர்களை விலகி வேறு இடத்தில் இருக்க முடியுமா? இந்த உண்மையை சேவை செய்தல் ஒன்ருலேயே உணர முடியும்,

'கடவுள் என்பவர் ஒருவர் இருக்கிருரோ? இல்லையோ? அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் நேர்மையாகவும் நீதியாகவும் ஒழுங்கு முறையாகவும் வாழ்ந்தால் அதுவே போதியது.' இப்படிப் பலர் பேசக்கேட்கின்ருேம். எத்தனையோ மிருகங்கள், பறவைகள், மரங்கள் பிறர் பொருளைத் தீண்டாமல், பிறருக்கு தீங்கு இழைக்காமல், பிறர் உதவியை நாடாது, பிறருக்குத் தம்மைப் பயன்படுத்தியே வாழுகின்றன. அப்படியானல் அந்த மனிதரை விட இவைகள் எவ்வளவு சிறந்தன? மனிதன் சிந்திக்கப்பிறந்தவன். எதனை? இறைவனை. இறை உணர்வு இல்லாதவன் 'மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்' என்பது வள்ளுவர் வாக்கு. மக்களுக்கு வேறு எவ்வுயிர்க்கும் இல்லாத ஒரு தனிப்பண்பு உண்டு. அது இன்னது என்பதை அவன் தனது பகுத்தறிவால் உணர வேண்டும். பண்பில்லாத மனிதனை மரம் என்று சொன்னல் அதனல் மரத்திற்கு இழிவு ஏற்படுகின்றது. ஏன்? மரம் தனக்குரிய பண்பை எப்பொழுதும் இழந்து விடுகின்ருன். ஆனல் மனிதனே நிமிஷத்திற்கு நிமிஷம் தன் பண்பை இழந்து கொண்டே வருகின்ருன்.

தியானம் மனதை நிலைப்படுத்துகிறது. உள்ளாழ்ந்து செல்லச்செய்கின்றது. கடலில் ஆழ்ந்து செல்வதற்குத் தக உயர்ந்த முத்துக்களைப் பெறுகின்றனர். அதேபோல் ஒருவன் தன்னுள்ளே எவ்வளவிற்கு ஆழ்ந்து செல்கின்றானோ? அதற்குத்தக உயர்ந்த கருத்துக்களைப் பெறுகின்றான்.

இந்த நிலை, எல்லாம் வல்ல இறைவனுடன் சேர்ந்து வாழும் வாழ்க்கையை அளிக்கிறது. இதனை 'அநுபூதி' என்பர். வாழ்வின் நோக்கம் அநுபூதி பெறுதலே. படிப்படியாக மனித இனம் அநுபூதி நிலைக்கு ஏறிவரும் மார்க்கமே தெய்வீக வாழ்வு என்பது. அன்பு செய்யப்பழகிச் சேவை செய்யக் கற்றுத் தியானம் பயின்றால் அநுபூதி நிலை வரும். இறைவனுக்கும் அவனுக்கும் வித்தியாசமே இல்லை. பார்க்குமிடமெல்லாம் இறை மயமாகவே காட்சியளிக்கும். எல்லாவற்றிலும் இறைவனைக் கண்டு மகிழ்வான். இன்பத்திலும் இறைவன். துன்பத்திலும் இறைவன். இரண்டும் ஒன்றுபோலவே இருக்கும். இதுவே தெய்வீக வாழ்வாகும். இந்நிலையை உலகமெல்லாம் அடைய வேண்டும் என்று கருதியே சுவாமி சிவானந்தர் அவர்கள் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தை உண்டாக்கி அதன்மூலம் மக்களைத் தெய்வீக வாழ்வுக்கு அழைத்துச் செல்லுகின்றார்கள்.

---

இமய மலையின் சாரலிலே
இயற்கை எழிலின் சூழலிலே
அமையுந் தவத்தின் இருப்பிடமாய்
அருமைச் சாலை ரிஷிகேசம்
தமிழும் ரசமும் தீர்ந்த நிலைச்
சத்து வத்தின் நல்லிருக்கை
நமரெல்லோரும் நாடுவதாம்
நல்லானந்த நடமரந்தான்.

(மு. வரதராசன்)

# சிவானந்தர் அருள் மொழிகள்.

கடவுள் ஒளிமயம், சாசுவதமான வாழ்க்கை, அன்பு சொரூபம். அவர் ஒருவரே சத்தியப் பொருள். அவர் ஒருவருக்கே இருக்கை உண்டு. ஏனைய பொருள்கள் யாவும் மித்தையே, இருக்கை யற்றவையே, வெறுந் தோற்றங்களே. எனவே உனது உற்ற துணைவனும் உன்னுள்ளே உறைபவருமான ஆண்டவனையே உள்ளன்புடனும் சிரத்தையுடனும் நேசி.

෴ ෴ ෴ ෴

நாம ரூபங்களுக்கெல்லாம் அடிப்படையாக உள்ளது சத்—சித்—ஆனந்தப் பரப் பிரம்மமே. அதுவே உலகப் பொருட்கள் அனைத்திலும் ஊடுருவி நிற்பது. அதுவே உலகம் அனைத்திலும் வியாபித்து முள்ளது. அதுவே அனைத்தையும் ஒன்றோடொன்று இணைக்கவுஞ் செய்கின்றது.

෴ ෴ ෴ ෴

துக்கங்களை முற்றிலும் புறக்கணிக்கவும் எல்லையற்ற ஆனந்தத்தை அடையவுந்தான் மனிதன் சதா பாடுபட்டுக் கொண்டிருக்கிறான். இந்த நோக்கத்துடன்தான் அவன் வாழ்க்கையில் ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறான். எனினும் அவன் உலக வாழ்க்கையில் உண்மையான சுகத்தைக் காண்பதில்லை. சுகத்திற்குப் பதிலாகத் துக்கத்தையும் வெறுப்பையுமேதான் அடைகின்றான். இவ்வெறுப்பே அவனை இறைவன் பாலும் திருப்புகின்றது.

෴ ෴ ෴ ෴

விஷய போகங்கள் கேடு விளைவிப்பவை. அவை ஒருக்காலும் நிரந்தர ஆனந்தத்தை அளிக்கா. எனவே பொறிகளைப் புலன்களினின்று மீட்டு அவற்றை ஆண்டவனிடம் திருப்பு. அப்பொழுதுதான் உனக்கு நிரந்தர ஆனந்தம் கிட்டும்.

෴ ෴ ෴ ෴

வேதமாவது, குருவாவது பிரம்மனை நேரிற் காட்ட முடியாது; வழியைத்தான் காட்டமுடியும். அதற்கு மேல் நீயே தான் சொந்த முயற்சியைக் கொண்டு பாடுபட்டாக வேண்டும். நீயேதான் நெறியான வாழ்க்கையை மேற்கொண்டு மனதைப் பரிசுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். பரிசுத்த மனதிலேதான் திவ்விய அருள் வீசும். பரிசுத்த மனமேதான் ஞானக்கண்ணாகவும் மாறுகின்றது. அதுவேதான் உள்ளுணர்வு என்றுங் கூறப்படுகின்றது. இந்த உள்ளுணர்வின் மூலமேதான் பரம் பொருளை நேரிற் காண முடியும். உள்ளுணர்வைப் பெற முயற்சி செய்.

அப்பிள் பழத்தைச் சாப்பிட்டால்தான் அதன் உருசியை அறிந்து கொள்ள முடியுமே யொழிய அந்த உருசியைப் பற்றி மற்றவர் எவ்வளவு எடுத்துக்கூறினாலும் அதை அறிந்து கொள்ள முடியாது. அதுபோன்று பிரம்மனை சுவானுபூதியில் தெரிந்துகொள்ள வேண்டுமே யொழிய வெறும் சாஸ்திர ஞானத்தால் மட்டும் அறிந்து கொள்ள முடியாது.

ஆண்டவன் மீதுள்ள நம்பிக்கையே ஆத்மீக ஏணியின் முதற்படி. அதுவே சாதகனுக்கு ஆத்மீகப் பாதையில் உற்சாகத்தை அளித்து அவனை ஆண்டவன் அருளுக்குப் பாத்திரமாக்கும்படி செய்கின்றது.

உலகப் பொருள்கள் அனைத்தும் சாரமற்றவை; உபயோகம் அற்றவை; அழியக் கூடியவை; துக்கம் தருபவை. இந்திரியங்களும் மனதும் ஆசைகாட்டி உன்னை விஷயாதிகளில் ஆழ்த்துகின்றன. இதனல் கேடுதான் ஏற்படுமேயொழிய நலன் ஒருக்காலும் ஏற்படப் போவதில்லை. இவைபோன்றன அல்ல ஆத்மனை அடைவதினல் ஏற்படும் பலன். ஆத்ம சாட்சாத்காரம் ஏற்பட்டால் மேலாம் சாந்தியும் நித்திய ஆனந்தமும்

உன்னை வந்து அடையும்; ஜனன மரணமும் உன்னைவிட்டு ஒழியும். எனவே ஆத்மனை அறிய இடையறாது பாடுபடு.

^ ^ ^ ^

உனது இதயக்குகையில் எப்பொழும் மெல்லிய குரலில் திவ்விய கீதம் ஒலித்த வண்ணமாகவே இருக்கின்றது. இது உன் செவிக்கு எட்டுவதில்லை. இதற்குக் காரணம் பொல்லாத பொறிகளின் ஆர்ப்பாட்டமும் கொந்தளிப்புமேதான். எனவே, பொறிகளைப் புலன்களினின்று மீட்டி உள்முகமாகத் திருப்பு. அப்பொழுது மனமும் உள்ளடங்கும்; திவ்விய ஒலியும் உன் செவிக்குக் கிட்டும்.

^ ^ ^ ^

இவ்வுலகில் உனக்கு ஒன்றும் சொந்தமானதன்று; உன்னுடைய தேகமும் உன்னுடையதன்று. எனவே ஒன்றினும் உடைமையைக் கோராது பற்றுதல் - ஆசைகள் அற்று ஆத்மனில் இன்புற்றிருப்பாயாக!

---

அவமே காலம் கழியாதே
அகிலம் வாழத் தொண்டாற்றி
பவத்தின் பயனை அடைந்திடலாம்
பண்பை வளர்த்தே உயர்ந்திடலாம்
தவத்தின் திருவாம் சிவானந்தர்
தண்மை அருளால் அன்புரையால்
சிவமே அன்பும் இன்புமெனச்
சிந்திப்போமே சிறப்புறவே.

(மு. வரதராசன்)

^ ^ ^ ^

**கருணையே வடிவமாகி ஈகையே கதிர்களாகி**
**அருணனே பொலிவதாகி அமைதியே நிஷ்டையாகி**
**இருள் நரகான வாழ்வில் இரவிபோல் ஒளிபரப்பி**
**அருள் விளையாடல் செய்யும் ஆனந்தக் குடிலோன் வாழ்க!**

(சுத்தானந்தர்)

# மகான்களின் மகிமை

(சுவாமி நிர்மலானந்தா — ரிஷிகேஷ்)

உலகின் நாலாபக்கங்களிலிருந்தும் அறிஞரும் பக்தர்களுமாக ஆயிரக்கணக்கான வெளிநாட்டு மக்கள் இந்தியாவுக்குத் தீர்த்த யாத்திரையாக இன்று வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் இந்திய நாட்டினிடம் அளவிறந்த பக்தி சிரத்தையோடு வருகிறார்கள். இதற்கென்ன காரணம்? இவர்களுடைய பக்தி சிரத்தைக்குப் பாத்திரமாகும் மகிமை இந்திய மண்ணுக்கு எப்படி வந்தது? இந்த மண்ணில் தோன்றிய மகான்களாலேயேதான் இதற்கு மகிமை வந்தது. மகான் என்பவர் யார்? பெரிய விஞ்ஞானியா? சிறந்த பேச்சாளரா? ராஜதந்திரியா? மாபெரும் மேதாவியா? அறிஞரா? படிப்பாளியா? இவர்கள் எவரும் மகான் என்று அழைக்கப்பட தகுதி உள்ளவர்கள் அல்லர்.

'கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்
கரடி வெம் புலி வாயையுங்
கட்டலாம் ஒரு சிங்க முதுகின் மேற்கொள்ளலாங்
கட் செவி யெடுத்தாட்டலாம்
....................................
....................................
சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது'

என்ற தாயுமானவர் பாடலுக்கேற்ப எதற்கும், யாருக்கும் எளிதில் அடங்காத இந்த மனதை அடக்கி, தமக்கு அடிமையாக வைத்துள்ள பெரியோர்களே மகான்களாவர். ஸ்ரீ ராமர், கண்ணபிரான், புத்தர், மஹாவீரர், சங்கரர், இராமானுஜர்,

சைதன்ய மகாப்பிரபு, ஸ்ரீ ராமகிருஷ்ணர், விவேகானந்தர், இராமதீர்த்தர், காந்தியடிகள், அரவிந்தர், ரமணர் முதலிய அவதார புருஷர்கள் இந்த மண்ணில் தோன்றியதாலேயே பாரத பூமி புண்ணிய பூமியாகியது. இம்மகான்கள் தமது சுகபோகங்கள், மாடமாளிகைகள் முதலிய வசதிகளையெல்லாம் விட்டு, சத்தம் சந்தடியற்று, இயற்கையழகு வாய்ந்த ஏகாந்தக் காடுகள், மலைகள், குகைகள், நதி தீரங்களிலிருந்து தவம் செய்கின்றனர். அவ்விடங்களில் மகான்கள் சாந்தியாயும், ஆனந்தமாயும் இருப்பதை அறிந்து உலக மக்கள் அன்னவர்களைத் தரிசித்து, அமைதி பெற்று வருகிறார்கள். காளடைவில் இந்த ஏகாந்த இடங்களெல்லாம் நகரங்களாக மாறிவிடுகின்றன. நம் பாரத நாட்டில் வாழ்ந்த பதினெண் சித்தர்கள், வாழ்ந்து சமாதியான இடங்கள் இன்று வானளாவும் கோபுரங்களுடன் கூடிய ஆலயங்களுடன் திகழும் நகரங்களாக விளங்குகின்றன.

ஆதிகாலத்திலே தில்லையில் திருமூலர்,
அழகர்மலை இராமதேவர், அனந்த சயனம் கும்பமுனி
திருப்பதி கொங்கணவர் காலமுனி ஆரூர்.
சோதிரங்கம் சட்டமுனி, கருவை கருவூரார்,
சுந்தரானந்தர் கூடல், சொல்லூர் எட்டுக்குடியில்
வால்மீகரோடு நற்றேரல் காசி நந்திதேவர்,
பாதி அரிச்சங்கரன் கோவிலில் பாம்பாட்டி,
பழனிமலை போகநாதர், பரங்குன்ற மதில் மச்சமுனி,
பொறையூர் கோரக்கர் பதஞ்சலி இராமேஸ்வரம்
சேதி வைத்தீஸ்வரன் கோவிலில் தன் வந்திரிநிகர்
மயூரம் குதர்பைச் சித்தர் இடைக்காடர்
சமாதியில் சேர்ந்தவர் எமைக்காக்கவே"

இப்படி முற்காலத்தில் வாழ்ந்த சித்தர் சமாதியான இடங்கள் க்ஷேத்திரமானது போல் இன்று நம்மிடையில் வாழ்ந்து மறைந்த மகான்களும், காட்சி தரும் மகான்களும் ஒதுங்கிய வனங்கள் எப்படி காட்சி அளிக்கின்றன என நோக்குவோம்.

திருவண்ணுமலை ஸ்ரீரமணமகரிஷி ஒதுங்கி சாதனை செய்த மலையடிவாரம் இன்று பெரிய ஆசிரமமாக மாறி அந்நிய நாட்டு அறிஞரும், நம் நாட்டு மேதாவிகளும் வந்து தங்கி, சாதனை செய்யும் இடமாகத் திகழ்கிறது.

கொங்கண தேச காசரக்கோடு மலைச்சரிவில் உள்ள காட்டில் சுவாமிராமதாசர் வந்து தங்கிசாதனை செய்த இடம் இன்று நல்லபோக்கு வரத்து வசதியுடன் காஞ்சன்காடு என்ற நாமத்துடன் பல்லாயிரக்கணக்கான பக்தர்களையும், வேதாந்திகளையும் தன்பால் ஈர்த்துக் கொண்டிருக்கிறது.

இமயத்தில் ரிஷிகேஷம் கங்கைக் கரையிலுள்ள முனிக்கிரதி என்றமலையடிவாரத்தில் இமய ஜோதி சிவானந்தஜீ வந்து தனித்திருந்த இடம் இன்றுகோயில், வைத்தியசாலை, அச்சகம், நூல் நிலையம், யோகாசனசாலை, சாதகர்கள் தங்கி சாதனை செய்யக்கூடிய குடிரங்கள், மற்றும் மின்சார விளக்கு போன்ற பல வசதிகளைத் தன்னகத்தே கொண்டு சிவானந்த நகராகி உலகத்தின் பலபாகங்களில் பல்வேறு பழக்க வழக்கங்கள், கலாசாரம், மனப்போக்குகொண்ட மக்கள் வந்து தங்கிப்போகும் இடமாகத் திகழ்வது காணக்கூடியதே.

பம்பாய் மாகாணத்தில் கணேசபுரி என்ற பயங்கர காட்டைத்தேடிப்பிடித்து வந்து தங்கிய நித்யானந்த சுவாமிகள் திருவடிபட்ட இடம் இன்று ரஸ்தா வசதியுடன் பல மாளிகைகள், உணவு விடுதிகளுடன் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் தினம் வரும் க்ஷேத்திரமாகியுள்ளதைக் கண்டு வருகிறோம்.

வங்கத்தில் உள்ள தட்சிணேஸ்வரத்தில், முன்பு ஸ்ரீராமராகவும், கிருஷ்ணனுகவும் தோன்றி, சமீபத்தில் ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சராக அவதரித்தமகான் திருவடிபட்டபூமி இன்று உலகத்தார் பலர் வந்து தரிசித்து சாந்தி பெறும் நகரமாகி இருப்பது யாவரும் அறிந்ததே.

திருவேங்கடம் மலையில் தனித்து இருந்து தவம் செய்து வருகையில் மக்கள் கூடி உபசரிக்க ஆரம்பித்தால் கீழே

இறங்கி ஏர்பேடு என்ற காட்டில் தங்க, அந்த இடம் இன்று கோயில், குளம், பள்ளிக்கூடம், சாதனை செய்ய குடிரங்கள் தரிசிக்க வரும் பக்தர் கூட்டங்கள் என்று காடுமேடுகளெல்லாம் நகரமாகி விட்டன. சுவாமிகள் நாமதேயமும் ஏர்பேடு மலையாளம் ஸ்வாமிகள் என்று வழங்கி வருகிறது.

சேந்தமங்கலத்தில் ஒரு மலையடிவாரக் குகையில் அவதூது ஸ்வாமிகள் தவம் செய்து வாழ்ந்து வந்த இடம் மலைக்கு படிக் கட்டுகளும், தத்தாத்ரேய ஆலயமும், வீடுகளும் கொண்டு விளங்குகிறது.

சாயிபாபா அவர்கள் ஒதுங்கி தங்கி இருந்த பாழ்மண்டபமே இன்று சிரிடி என்ற பெயருடன் விளங்குகிறது.

உபாசினி பாபா மறைவாக இருக்க தேர்ந்தெடுத்து தங்கி இருந்த சுடுகாடுதான் இன்று உபாசினி நகராகி ஒரு கன்னிக் குமரிகளின் தவச்சாலையோடு, சாக்கோரி கன்னியா குமாரி கோதாவரி மாதாஜீயின் தலைமையில் நடந்து வருகிறது.

ஹூப்ளியில் வாழ்ந்த சித்தராகிய சித்தாரூட சுவாமிகள் வாசம் செய்த இடம் இன்று பெரிய கட்டடங்களுடன் கம்பீரமாகத் திகழ்கிறது. எத்தனை பேர் சென்றாலும் தங்கவும், உண்ணவும் இடம் அளித்துக் கொண்டு வரையாது வழங்கும் வள்ளல் என திகழ்கிறது.

பிருந்தாவனத்தை அடுத்த ரமணரேத்தியில் பஞ்சாயி சாது ஒருவர் கண்ணபிரான் பாததூளி பட்டு புனிதமடைந்த, அவர் மண் உண்ட மண்மேட்டில் தங்கி இருந்து வாசம் செய்ய இன்று எத்தனைபேர் சென்றாலும் உணவு அளிக்கும் காமதேனுவாக நூற்றுக்கணக்கான பசுக்களைக் கொண்ட கோசாலையுடன் திகழ்கிறது.

அனந்தையில் கோட்டைக்குள் ஒரு பயங்கர புதராகக் கிடந்த இடத்தில் இன்று நாமபிரசாரம் செய்து வரும் சுவாமி அபேதானந்தஜீ அவர்கள் வெண்ணெய் உண்ட பாலகிருஷ்ணுக்கு ஒரு ஆலயம் எழுப்பி சதா பகவன் நாம கீர்த்தனம் முழங்கும் புண்ணிய க்ஷேத்ரமாக்கி இருப்பதை இன்று காணலாம்.

ஸ்ரீ நாராயண சுவாஸ்மிஜீ மகராஜ் அவர்கள் ஏகாந்தமாக தவம் செய்ய விரும்பி இமயத்தில் யாரும் போகமுடியாத இடத்தில் தங்கி இருக்க, அவர் அங்கிருப்பதை யறிந்தபக்தஜனங்கள் அன்னுரை சூழ்ந்து கொண்டு அந்த இடத்தில் பல லட்சரூபாயில் ஸ்ரீநாராயண மந்திர் ஒன்றும், குழந்தைகள் பள்ளியும், பஜனே மண்டபமும் கட்டி எப்பொழுதும் ஸ்ரீநாராயண நாமம் ஒலித்துக் கொண்டிருக்கும் நாராயண நகரை நிர்மாணித்துள்ளனர். ஒரு வைத்தியசாலேயும், கலாசாலேயும் அந்தப்பக்கத்தில் சமீபத்தில் ஏற்பட்டிருக்கிறது.

இங்ஙனம் பல முஸ்லிம், கிறிஸ்துவ, ஜைன, புத்த மகான்கள் திருவடிபட்ட புண்ணிய பூமிகள் யாத்திரை ஸ்தலமாகி இருக்கின்றன. பல ஆண்டுகள் திட்டமிட்டு, பலலட்ச ரூபாய்களே செலவழித்து, பல நிபுணர்களேக் கொண்டு நகரங்களே நிர்மாணித்துக் கொண்டிருக்கின்றனர் ஒருபக்கத்தில், மறுபக்கத்திலேர, உலகத்தைத் துறந்து, பிக்ஷாண்டிகளாக தனிமையை நாடிச்செல்லும் மகான்களின் இருப்பிடத்தைச்சுற்றி எந்த வித திட்டமும் இல்லாமல் நகரங்கள் உருவாகி வருகின்றன. இது எங்ஙனம் சாத்தியமாகிறது? அந்த மகான்களின் ஆத்ம பலம், மகிமையே இதற்குக்காரணம் என்று சொல்லாமல் வேறென்ன சொல்லுவது?.

அன்று ஸ்ரீராமரின் திருவடிபட்ட கற்பாறை அகலிகையாக மாறவில்லேயா? துளசிதாசர் அமர்ந்த கற்பாறை உருமாறவில்லேயா? பகவத்நாமத்தைக் கேட்ட பலாமரங்கள் ஆண்டவனுக்கு சேவை செய்யும் பாக்கியத்தைப் பெறவில்லேயா? இத்தகைய மகான்களால் தான் பாரத நாட்டின் ஆத்மசக்தி இன்னும் அழியாமல் காப்பாற்றப்பட்டு வருகிறது. பெரிய ஆலயத்தைத்தாங்கி நிற்கும் அஸ்திவாரம் தன்னே மற்றவர் கண்களிலிருந்து மறைத்து வைத்துக்கொண்டிருக்கிறது. வெளி அலங்காரத்தை மட்டும் பார்த்து செல்லுபவன், அந்த ஆலயத்தின் உண்மை சக்தி எங்குள்ளது என்பதை உணர்வதில்லே. சிந்தித்து பார்ப்பவனே உண்மை ஆதாரம் எங்கு இருக்கிறது என்பதை எண்ணிப்பார்க்கிருன். இங்ஙனமே இந்த மகான்களும்

தம்மைக் காட்டிக் கொள்வதில்லை. எங்கோ மூலையில், தனித்த, ஜனசஞ்சாரமற்ற இடத்தில் மறைந்து வாழ்கின்றனர். ஆனால் இவர்களிடத்திருந்துதான் உண்மையான சக்தி வெளி வந்து நாட்டை, மக்களை காப்பாற்றுகிறது. இந்த உண்மையை ஒரு சில பக்த பெருமக்களே உணர்கின்றனர். அவர்கள் மறைந்து வாழவும் இந்த மகான்களை அடைந்து அவர்களை மற்றவர்களுக்குக் காட்டித் தருகின்றனர்.

மனுஷ்யாணும் ஸஹஸ்ரேஷு கஸ்சித்யததி ஸித்தயே!
யததாமபி ஸித்தானும் கஸ்சின் மாம் வேத்தி தத்வத' [கீதை]

என்ற வாக்கின்படி மகான்களைக் காட்டித் தரும் அவர்களை அணுகி, அவர்களுடைய சாந்நித்தியத்தில் சாந்தி பெற்று நன்னிலையை அடைபவர்கள் வெகு சிலர். அந்தப் பேற்றை நாம் அடைய ஆண்டவன் அருள்பாலிப்பாராக.

---

ரிஷிகேசத்தில் கங்கைக்கரையில் சுவாமிகள் அமைத்துள்ள ஆச்சிரமத்தைச் சிலமாதங்கட்கு முன்பு பார்க்ககிடைத்தது. உலகின் ஆத்மீக முன்னேற்றத்திற்காக அவர் செலவிடும் பெரும் சக்தி என்னைக்கவர்ந்தது. எங்கெங்கும் இந்து தர்மத்தைப் பரப்புவதில் அவர் பெருமுயற்சி எடுத்துக்கொண்டிருக்கின்றார். தெய்வ நெறிக் கழகத்தார் வெளியிடும் பத்திரிகைகளே ஆத்மீக மறுமலர்ச்சித்துறையிலே அவர் செய்யும் பெருந்தொண்டின் சின்னங்கள். அவரை யொட்டிப்பல தன்னலமற்ற தொண்டர்கள் வாழ்கின்றனர். அவரது இயக்கம் உலகெங்கும் உள்ள மக்கள் வாழ்வில் தெய்வாம்சத்தைப் பரப்பி வருகிறது.

[பி. என், தத்தர்]

≫ ≫ ≫ ≫

நமது முன்பார்வையிலுள்ள சீடர்களை அழைத்துச் செல்வது மட்டுமன்றி, தேசம் எங்கிலும் பரவி நிற்கும் பெருங்குழுவான ஆதரவாளர்களையும் ஊக்குவதில் சுவாமிகள் சிறந்து விளங்குகிறார், அவர்கட்கு நம்நாட்டுப் பழங்கால ரிஷிகளின் போதனைகளை விளக்கிக்கூறித் தமது சொந்த வாழ்க்கையை உதாரணமாகக்காட்டி புத்துணர்ச்சி யூட்டிவருகின்றார்.

(ராஜாஜீ)

ஓம்

# அன்பு

(சே. கனகசபை, பி. ஏ)

வம்பு துன்பிலாத உலகம்
வாய்ப்பதெதா லே? — நெஞ்சில்
மமதை நீங்கி, மாந்தர் அன்பு
வழிச்செல் வதா லே
அன்பு செய்த புனிதர் இன்பம்
அடைந்த னர்அன் றோ? இதனை
அறிந்தும் மனித சாதி போரில்
அழித லும்நன் றோ? 1

பிள்ளை குட்டி மனைவி யென்றால்
பிரியம் கொள்கி றோம்; — ஆனால்
பிறரைக் காணின் மனது கோணிப்
பின்னே செல்கி றோம்!
உள்ளே இனிக்கும் குடும்பப் பற்றை
உலகப் பாச மாய் - விரிப்பின்,
ஊறிப் பெருகும் அன்பில், உயிர்கள்
உலவும் நேச மாய்! 2

வாங்கச் சல்லிக் காசும் வேண்டாம்,
மனதில் இருப்ப து; — அதனை
மற்ற வர்க்கும் வழங்கிவிட்டால்
மகிழ்ச்சிப் பெருக்க து! -
தாங்க வொண்ணுத் துயரப் புண்ணைத்
தவிர்த்து வைப்ப து! - அன்பு
சக்தி யாவும் புகலப் போமோ?
தரணிப் பிணைப்பது. 3

பண்பில் லாமல் சாதி சமயம்
பகைமை வளர்ப்ப தோ? — மேலும்
பல நிறமொழிப் பகுப்பைச் சாட்டிப்
பாசம் குலைப்ப தோ?
அன்பில் லாமல் துளியும் வாழ்வில்
அமைதி சூழு மோ? — புவி
அனைத்தும் ஒருநற் குடும்பமாகி
அன்பில் வாழு வோம்! 4

# சுத்தானந்தரின் கடிதம்.

காட்டுப்புத்தூர் மசூதி,

**ஜனப் பீர் முஹம்மது ஸாகிப் அவர்களுக்கு,**

அல்லாஹு—தாஆலா எல்லா நலமும் அருளுக! நான் நாமக்கல்லுக்கு வந்தபோது தாங்கள் செய்த உபசாரத்தை ஒருநாளும் மறக்க முடியாது. தாங்கள் ஓதிய குரான் சூராக்கள் என் உள்ளத்தில் இஸ்லாம் பக்தியை உண்டுபண்ணின. இங்கே கிலாஃபத் இயக்கம் பலமாக நடக்கிறது. நான் அப்துல்காதர் வீட்டில் புத்தகங்களை வைத்துக்கொண்டு, மசூதியிலேயே நிமாசு செய்து வருகிறேன். இரவில் சிருப்புராணம் நடக்கிறது. வெள்ளிக்கிழமை தோறும் முஸ்தபா முஹம்மது ஸல்லத்தின் தியாக வாழ்க்கையையும், திருக்குரான் சொல்லும் பக்தி மார்க்கத்தையும் பற்றி குத்பா ஓதியதும் பேசி வருகிறேன். ரம்ஜான் நோன்பு எனக்குப் பெரும் ஆறுதலளித்தது. பட்டினியிருந்து தியானித்து, இரவில் நான் பேரீச்சம் பழமும் பாலும் உண்டு வந்ததால் உடலும் நலமெய்தியிருக்கிறது. இஸ்லாம் சகோதரர் மிக்க அன்பாகவும் மரியாதையாகவும் பொதுக் காரியத்தில் மிக்க உற்சாகமாகவும் இருக்கிறார்கள்.

கிலாபத்து நாளில் இங்கே பெரிய கொண்டாட்டம் நடந்தது. ஊரெல்லாம் கூடியது. என்னுடன் உஸ்மானும் ஹாஸனும் இருந்துதவினர்கள். சென்னை கிலாபத் சங்கத் தலைவரான யாகுப் ஹாஸனுக்கு இங்கே நடப்பதெல்லாம் எழுதினேன். மிகவும் சந்தோஷமான பதிலுடன், ஏராளமான துண்டுப்பிரசுரங்களும் அனுப்பினர். இந்த வெற்றிக்கும் பொது நலத்திற்கும் பின்னே சில பொருமைக்காரர்களும் சூழ்ச்சியை நடத்துகிறார்கள். கோளும் பொருமையும் இல்லாமல் உலகம் ஏது? நடக்கட்டும். நான் இவர்கள் மிரட்டலுக்கு அஞ்சப்போவதில்லை. என் மனச்சாட்சிக்குப் பொய்க்காமல் உண்மை வழியில் நடந்தால், யாருக்குப் பயப்படவேண்டும்?

உலகில் ஒருவனுக்கு அமுதம், மற்றவனுக்கு நஞ்சாக இருக்கிறது; பித்தக்காரனுக்கு மாம்பழம் கசக்கிறது.

நிற்க, ஒவ்வொருநாளும் இந்துமுஸல்மான் ஒற்றுமைக்கு வழி துலங்குகிறது. வழி அரசியலில் இல்லை; ஆத்மீக சாதனத்திலேதான் உள்ளது. ஒருவன் கோயிலில் தொழுதாலும் மசூதியில் தொழுதாலும் ஒரே இறைவனை உள்ளத்தில் வைத்து தியானிப்பானுனல், இந்து உள்ளம் இஸ்லாம் உள்ளம் என்றில்லாமல், எல்லாம் பொருந்தி நிற்கும். ஆகாசம் எங்கும் ஒன்றுதான். அதில் படரும் மேகமும் பனியும் இடத்திற் கேற்றபடி பலவாருகும். நாம் ஆகாசத்தையே நினைந்து மேகச்சித்திரத்தின் உருமாற்றத்தில் மயங்காதிருந்தால், ஏகரச உணர்ச்சி உண்டாகும். இந்து முஸ்லிம் இருவருக்கும் பஞ்சபூத சரீரந்தான்; இருவருள்ளும் ஒரே ஆத்மாதான்; இருவருக்கும் கடவுள் ஒருவரே. அவர் எங்கும் தானுன தன்மயர், சாதிமத பேதமற்றவர்; ஸர்வாத்ம ஸமரஸரான அவரை உள்ளத்தில் எண்ணினுல் உலகத்திலும் அவர்மயமே காணும். பிறகு சாதி மத நாடுநிற வேறுபாடுகள் இருக்க இடமில்லை. சூரிய சந்திரர் எப்படி எல்லாருக்கும் பொதுவோ, அப்படியே அல்லாவின் அருளும் எல்லாருக்கும் பொதுவாகும். இந்தச் சிந்தனை வளர்ந்ததுமுதல் எனக்கு, இந்து வேறே, முஸ்லீம் வேறே, என்று தோன்றவே யில்லை. அப்துல் காதர் வீட்டிலும் மசூதியிலும் நான் தாராளமாகப் பழகுகிறேன். இஸ்லாமியர் நட்பை உதவிய இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். அல்லாஹு அக்பர்:-

---

நாடு சுதந்திரமடைந்து விட்டது. ஆனுல் அதைவிடச் சிறந்ததும் கஷ்டமானதுமான பல பிரச்சனைகள் தேசத்தை எதிர் நோக்கி நிற்கின்றன, இப்பிரச்சனைகளைத் தெய்வீக சக்தியால்தான் தீர்த்து வைக்க முடியும். தெய்வீக சக்தி நம்மிடந்தோன்றி நம்மூலமாகச் செயல்பட வேண்டும். ரிஷிகேசம் போன்ற இடத்தில்தான் இது உண்டாதல் முடியும். இந்த நோக்கத்தை வெற்றிபெறச் செய்ய சுவாமிகள் நம் தாய்நாட்டினதும் அகில உலகத்தினதும் நலனுக்கு வேண்டித்தமது திருப்பணியைத் தொடர்ந்து செய்து வருவார் எனநம்புகிறேன்.

(டாக்டர் இராஜேந்திரப்பிரசாத்)

ஓம்

# வாழ்க தெய்விக வாழ்க்கைச் சங்கம்!

பல்லவி

வாழ்கதெய்வ வாழ்க்கைச்சங்கம், வாழ்கவாழ்கவே!
மலர்கதெய்வ வாழ்க்கையெங்கும் வளர்க, பொலிகவே! (வா)

அநுபல்லவி

வீழ்ககொடிய அசுரசக்தி, வீழ்கவீழ்கவே!
வெல்கபுனித அமரசக்தி, வெல்கவெல்கவே! (வா)

சரணங்கள்

காமக்ரோத லோபமோகக் கங்குல் அழியவே,
கருணை, அன்பு தவழும்இன்பக் காலைபுலரவே,
தூய்மைவாய்மை காழும்ஆத்ம ஜோதிஒளிரவே,
தொண்டுபுரியும் தெய்வவாழ்வுச் சங்கம் வளர்கவே! (வா)

அன்புகொண்டு, கடமைசெய்து, அருள்கனிந்திட,
அகண்டபஜனை தியானமோனத் தாழ்ந்துமூழ்கியே,
இன்பஞானச் சோதிகாணும் நெறியுணர்த்தலே
இலட்சியமாய்க் கொண்டசங்கம் என்றும்வாழ்கவே! (வா)

இமயஜோதி யானஞான குருசிவானந்தர்
இணையிலாத கருணைகொண்டு, அவனிஉய்யவே,
அமரஞான, கர்ம, யோக, பக்திவளர்த்திடும்
அரியதிவ்ய ஜீவனப்பொற் சங்கம்வாழ்கவே! (வா)

"பரமஹம்ஸ தாசன்"

# எனது யப்பான் தேசத்துப் பிரயாண அநுபவங்கள்

(க. இராமச்சந்திரன்)

யப்பான் தேசத்தையும், 1958-ம் ஆண்டில் அங்கு செல்லும் அரிய சந்தர்ப்பத்தை எனக்களித்த சர்வமத சரித்திர மகாநாட்டையும் உன்னும்போது எத்தனையோ பழைய எண்ணங்கள் என்மனக்கண் முன் தோன்றுகின்றன. முதலாவதாக. யப்பான் தேசம் ருஷியச் சண்டையில் வெற்றிபெற்று ஐரோப்பிய வல்லரசுகளின் கவனத்தையும் மதிப்பையும் ஈர்த்து நின்ற விதமும், அதனுல் அன்றைய ஆசியமக்கள் உற்சாகத்துடன் பெருமை பாராட்டிக் கொண்ட முறையுமாகும். செயின் நிஹால் சிங்கி என்ற புகழ்பெற்ற நூலாசிரியர் அவற்றைப் பற்றி எழுதிய கட்டுரைகளை வாசிக்கும் பாக்கியம் இளைஞனுக இருக்கும்போதே எனக்குக் கிடைத்தது. இரண்டாவதாக, எனது ஞாபகத்திலுள்ள முக்கிய விஷயம் 1902-ம் ஆண்டில் யப்பானில் நடைபெறவிருந்த சர்வமத மகாநாட்டிற்கு அந்த நாட்டு அரசாங்கமும் பிரமுகர்களும் ஆதரவளிக்கப் பின்வாங்கியதாகும். இது சம்பந்தமான விபரங்களை சுவாமி இராம தீர்த்தர் அவர்களின் வரலாற்று நூலில் காணலாம். வேதாந்த கேசரியாம் விவேகானந்தரின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இந்தியப் பத்திரிகைகளில் பிரசாரம் பெற்ற அந்தச் சர்வமத மகாநாட்டிற் கலந்து கொள்ள விரும்பி யப்பான் சேர்ந்த இராமதீர்த்தர் ஏமாற்றமடைந்தனர். ஆனுல், தெய்வத் திருவருள் அவரை அங்கிருந்து அமெரிக்கா அழைத்துச் சென்று இரு ஆண்டுகட்கு மேல் அவரை அங்கே அரிய அத்யாத்ம சேவையில் ஈடுபடச் செய்துவிட்டது. தன்னலம் நீத்துப் பிறர்பொருன்னலத்திற்காகவே வாழும் உத்தமர்களின் வாழ்க்கையில் காணக்கிடக்கும் அற்புத நிகழ்ச்சிகளுள் இதுவும் ஒன்ருகும்.

சென்ற அரை நூற்ருண்டு எல்லைக்குள் உலகில் எத்தனை பெரிய மாற்றங்கள் நேர்ந்துள்ளன? மக்கள் உள்ளத்திலிருந்து என்ன அற்புத முறையில் பழைய கொள்கைகள் மறைந்

துள்ளன? அவற்றினிடத்தில் எத்தனை புதுப்புதுக்கருத்துக்கள் உதித்துள்ளன? 1902-ம் ஆண்டில் மதச் சம்பந்தமான மகாநாடு எதுவும் முக்கியமானதல்ல எனக்கருதிய ஒருசாதியினரே 1956-ம் ஆண்டில் சர்வமத மகாநாடு நடாத்த முயற்சி எடுத்தனர். அத்தோடு நின்றுவிடாது, ஆசியாக் கண்டத்தில் முதன் முறையாக நடைபெறவிருந்த சர்வமத சரித்திர மகாநாட்டையும் தங்கள் தேசத்தின் தலைநகரிலேயே நடாத்துமாறு கேட்டுக் கொண்டனர். இதற்கிணங்கி 1958-ம் ஆண்டில் நடைபெற்றதே உலகின் நாலாபக்கங்களிலுமிருந்து தத்துவ பேராசியர்களையும் அறிஞர்களையுங் கொண்ட ரொக்கியோ மகாநாடு. இரண்டாவது உலகப் போரால் நேர்ந்த அழிவும் அனர்த்தமுமே மக்களின் மனதில் ஆன்மிக விஷயங்களைப் பற்றிச்சிந்திக்கும் ஆர்வத்தைக் தூண்டியதெனச் சொல்லவும்வேண்டுமோ தனிமனித வாழ்வில்சரி, ஒரு சமுதாய வாழ்வில்சரி, வாழ்வானது துன்பக்காட்டில் அலையும்போது அல்லது துயரக்கடலில் அமிழ்ந்தும் வேளையில்தான் தெய்வத்தைப் பற்றியோ ஆத்மார்த்த உண்மைகளைக்குறித்தோ சிந்திக்கும் சந்தர்ப்பம் மனிதனுக்கு வலிய வந்து சேர்கின்றதெனலாம். நான் யப்பானில் ஏழுவாரங்கள் சுற்றுப்பிரயாணஞ் செய்தது சமய ஆராய்ச்சித்தொடர்பிலாகும். எனவே, எனதுபிரயாணக் குறிப்புகள் பெரிதும் அந்நாட்டுப் பழைய நாகரீகம், கலாச்சாரம். சமயம் ஆகிய மூன்றையும் பற்றியே, எனினும் முதலாவதான இப் பேச்சில் அந்நாட்டு அரசியல், பொருளாதாரம் சமுதாய வாழ்வு பற்றியும் சிறிது கூறவேண்டியது எனது கடமையாகும்.

உதய சூரிய நாடாகக்கருதப்படும் யப்பான் 4200 தீவுகளைக் கொண்டது. அவற்றுள் 500 தீவுகளில்தான் மக்கள் சீவிக்க முடியும். ஏனையவற்றுள் சில எரிமலைகளிலிருந்து அக்கினியைக்கக்கிக் கொண்டிருப்பதை இன்றுங்காணலாம், கிழக்கு ஆசியா குறித்த பூமிசாஸ்திரப் படத்தைப் பார்க்கும் மாணவன் கண்ணில் யப்பான் தீவுகள் பெரிய, சிறிய மீன்கள் போலவும்,சீனஒர்பெரிய வாத்தைப்போலவும், கோரியா அதின்

மூக்கைப்போலவும் காட்சியளிக்குமெனலாம். யப்பானின் இன்றைய குடிசனத்தொகை மொத்தம் பத்துக்கோடியாகும் அதில் பத்தில் ஒரு பகுதியான ஒரு கோடி மக்கள் அதின் தலைநகரான ரொக்கியோவில் வசிக்கின்றனர். இலங்கையின் முழு குடியிருப்பையும் ஒரு பட்டணத்துள் அடக்கினால் எப்படியிருக்குமெனச் சற்றே சிந்தித்துப் பாருங்கள். இத்தொடர்பில் பிறிதொரு விஷயமும் சிந்திக்க வேண்டியதாகும். அதாவது இன்னும் ஒரு கோடிமக்களைக் கொண்டிராத நம் சிறு தேசத்தைப்பற்றி நாம் எவ்வளவு பெருமை பாராட்டிக் கொள்கிறோம் என்பதாம்? 'உலகில் நமக்கு நிகர் எவர் உளர்?" என்று கூடப்பிரசாரஞ் செய்ய நம்முள் சிலர் பின்வாங்குவதில்லை.

யப்பான் குடிசனத் தொகையைக் குறிப்பிடும்போது கவனிக்கவேண்டிய சில புள்ளிகள் உள, சென்ற மகாயுத்தத்திற்குமுன் இருபது ஆண்டுகளாக சராசரி வருஷம் ஒன்றுக்கு சனத்தொகை பத்து லட்சமாக ஏறிவந்தது. அந்நிய நாடுகளைப் பிடிக்கும் ஆசை அரசியல் வாதிகளின் மூளையில் முளைத்தது முக்கியமாக இக்காரணம் பற்றியே. யுத்தமுடிவில் இந்த நிலைபரம் முற்றிலும் மாறியுள்ளது. 1932-ம் ஆண்டில் குடும்பத்தில் சராசரி ஐந்து பிள்ளைகளாக இருந்தது இன்று இரண்டாகக் குறைந்துள்ளது. கர்ப்ப சிதைவுகூட சட்டரீதியாக ஏற்கப்பட்டுள்ளது. இதின் விளைவாகச் சென்ற ஆண்டில் மாத்திரம் பதினைந்து லட்சம் கர்ப்பச்சிதைவுகள் பதியப்பட்டுள்ளனவாம். ரொக்கியோ நகரின் வீதிகளில் புகையிரத நிலையங்களிலும் நமது கவனத்தை முதலில் கவருவது பல்லாயிரக் கணக்கான கன்னிகைகள் காலையில் தத்தம் உத்தியோக நிலையங்கட்கு வரிசையாகப் பிரயாணஞ் செய்யும் அழகான காட்சியாகும், விவசாயப் பண்ணைகளிலும், இயந்திர சாலைகளிலும், மீன்பிடி நிலையங்களிலும் ஆடவர் உழைக்க, ஏனைய துறைகளில்எல்லாம் பெரும்பாலும் பெண்களேகடமையாற்றுகின்றனர்கள். இந்தசூழ் நிலையில் எதிர்கால இல்லறச் சிறப்பு எப்படி இருக்கப் போகிறதென்பதை அன்பர்கள் யூகித்துக் கொள்ளலாம்!

இந்தியாவோடும் சீனத்தோடும் ஒப்பிடும்போது, யப்பான் மிகவும் இளைய நாடாகும். மஹாவீரர், கௌதமபுத்தர். கொன்

பியூசியஸ், லவோற்சே போன்ற மஹாபுருஷர்கள் வாழ்க்கைத் தத்துவம் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து இருந்த காலத்து. யப்பானிய மக்கள் பல்வேறுவர்க்கத்தைச் சேர்ந்தவர்களாய் ஒவ்வொரு கணமோ குலமோ தனக்கென ஓர் சிறு தேவதையை வழிபடும் இனமாய் நாகரிக ஏணியின் முதல் அடியைப் பற்றியவர்களாய் வாழ்ந்தனரெனலாம். பின்னாளில் சமயத்துறையிலும் கலாச்சாரத்திலும் அவர்கள் அடைந்த முன்னேற்றமெல்லாம் இந்திய-சீன நாடுகளின் தொடர்பால் ஏற்பட்டதேயாம்.

இந்தியாவில் போல நீண்ட நதிகளையும் பரந்து விரிந்த பள்ளத்தாக்குகளையும் அங்கே காண முடியாது. ஆனால் பல உயர்ந்த மலைகளையும் இயற்கையாகவே அமைந்துள்ள பல வாவிகளையும் காணலாம். இவற்றின் அழகைப் பன்மடங்காகச் செய்ய நாட்டின் நாலாபக்கங்களிலும் நூற்றுக் கணக்கான நந்தவனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. யப்பானின் பழைய தலை நகரான கியோற்றோவில் மாத்திரம் நூறு பெரிய நந்தவனங்கள் உள்ளன இவற்றுள் முக்கியமானவை அவ்வக்காலத்து அரசப்பரம்பரைகளை நமக்கு நினைவூட்டும் முறையில் அமைந்துள்ளன. என்னுடன் கூடிப்பிரயாணஞ் செய்த பல ஐரோப்பிய அமெரிக்க அன்பர்கள் உலகத்தின் அழகைப்பலமுறைசுற்றிப் பார்த்து ரசித்தவர்கள், அவர்களே பியூஜிமலையின் அடிவாரத்தில் இயற்கையாக அமைந்துள்ள பஞ்ச வாவிகளையும், 8200 அடி உயரமுள்ள நந்தைமலை நடுவில் பூகம்பங் காரணமாகத் தோன்றிய சச்சி வாவியையும் பார்த்துவிட்டு, இவை போன்ற இயற்கை அழகை உலகில் வேறு எந்த இடத்திலாவது காணமுடியாது எனப்புகழ்ந்தனர். யப்பான் மொழியில் 'சச்சி' என்றால் இன்பம். எனவே இந்த இன்பவாவி 'இகலோக இன்பத்திற்கு இன்று உறைவிடமாக மாறியுள்ளது. பரலோக இன்பத்தையும் இது தரவல்ல தென்பதற்கு எனது சொந்த அனுபவம் போதிய சான்றாகும். கீழுள்ள பெரியவாவியைத்தாண்டி மேலுள்ள சிறு வாவிக்கரையை அடைந்ததும் எவ்வித எத்தனமுமின்றி எனது மனது லயமடைந்துவிட்டது. வாய்விட்டுச் சொல்ல முடியாத முறையில் உள்ளத்

தில் சாந்தியும் இன்பமும் பொங்கி வழிந்தன. மலையின் மாலைக் குளிர் காற்றின் தாக்குதலையே உணரா விதத்தில் உடல் அசைவற்று நின்று விட்டது. அன்பர் ஒருவர் தோளில் தட்டவே, இயற்கை அழகினைக் காண்போர் அவ்வழகே காரணமாக இறைவனைத் தியானிப்பதையும் அதனுல் அடையும் பயனையுஞ்சேர்த்துக்கவிச்சக்கரவர்த்திகம்பர் பாடிய பாடல் நினைவுக்கு வந்தது. அதாவது.

**மரகதச் சயிலம் செந்தாமரை மலர்க் காடு பூத்து**
**நிரை செறிக் கங்கை விசும் நிவலையால் நனைந்து செய்ய**
**இரகுறை தொடரும் வேற்கண் மயிலொடுர் இருந்த தெய்ப்ப**
**பெருகிய செவ்வி கண்டார்; பிறப்பெனும் பிணிகள் தீர்ந்தார்.**

முற்காலரிஷிகள், சான்ருேர்கள், இயற்கை அன்னை அழகுடன் அரசுபுரியும் இடங்களைக் கண்டதும், நிம்மதியுடன் நிச்சிந்தையுடன் இறையைத் தியானித்துப் பிறவிப் பிணிக்கு மருந்துபெறப் பொருத்தமான இடங்களாக எண்ணி அங்கே அறநிலையங்களையோ ஆலயங்களையோ அமைத்துக் கொண்டனர். இன்றைய மனிதனே அவ்வித இடங்களை இந்திரியங்கள் இன்பம் நுகர்தற்கு வாயப்பானவையாகக் கருதி களியாட்டங்களுக்கு வேண்டிய உல்லாச விடுதிச் சாலைகளைக் கட்டிக்கொள்கிருர்கள். பெரிய வாவியான சுசென்ஜியின் மத்தியில் தியான மண்டபத்தோடு கூடிய ஓர் ஆலயமும் உண்டென்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அத்தோடு இவ்விரு வாவிகளின் அடிவாரத்தில் அமைந்துள்ள நிக்கோ என்னும் பட்டினம் அருகே புராதன ஆலயங்களைக் கொண்ட இடமுமாகும். நாகரீக வாழ்வின் மனித சமுதாயம் எவ்வளவு தூரம் வெற்றிகரமாகப் பின் சென்றுவிட்ட தென்பதை நன்கு விளக்குவதற்காகவே மறக்க முடியாத சொந்த அநுபவமொன்றை சிறிது விபரமாக இங்கு தருகின்றேன்.

யப்பானின் அரசியல் வரலாற்றைப்பற்றிப் பேசும்போது அதனை முக்கிய மூன்று பிரிவுகளாகக்கூறலாம். எட்டாம் நூற்றுண்டுக்கு முன், பௌத்தமத வளர்ச்சிக்கு ஊற்றிடமாக

விருந்த நாறு என்னும் இடத்தைத் தலைநகராகக் கொண்டிருந்த இராச்சியம். கி.பி. 794ம் ஆண்டில் சக்கரவர்த்தி கன்மு என்பவரால் கியோற்றோவைத் தலைநகராகக் கொண்ட இராச்சியம் நிறுவப்பட்டது. 1868ம் ஆண்டில் ஆரம்பித்த பெய்ஜி ஆட்சி ரொக்கியோவைத் தலை நகராக்கியதும் கியோற்றோவின் பெருமை குறைந்து விட்டது. எனினும், அதின் புராதன மகிமை இன்னும் பேசப்படுகிறது.

சர்வமத சரித்திர மகாநாட்டில் கலந்துகொள்ள வந்த பிரதிநிதிகளை வரவேற்றுபசரித்த யப்பானிய விஞ்ஞான சங்கமும், நிர்வாகக் குழுவின் தலைவரான இளவரசர் மிக்காசா அவர்களும் எங்கள் பிரயாண ஒழுங்குகளைத் திட்டம் பண்ணிய விதம் அற்புதமானதாகும். குறுகிய கால எல்லைக்குள் யப்பானின் வெவ்வேறு சமயங்களுடனும் கலாச்சாரத்துடன் தொடர்புடைய முக்கிய இடங்களையெல்லாம் பார்க்கக்கூடிய முறையில் பிரயாணஞ் செய்பவர் எவர்க்குங் கிட்டாத வசதிகளும் ஆலய தரிசனங்களும் எங்களுக்கு மிகவும் அருமையான முறையில் கிடைத்தன. அக்காட்சிகள் குறித்த விபரங்களை அடுத்த பேச்சில் எடுத்துரைப்பேன். மகாநாடு கூடுவதற்கு மூன்று வாரங்கட்கு முன்னரேயே யப்பானை அடைந்த காரணத்தால் நிர்வாகக் குழு போட்ட அட்டவணைக்கும் அப்பால் பல தவ நிலையங்களைத் தரிசிக்கும் பாக்கியமும் எனக்குக் கிடைத்துவிட்டது. அத்தோடு அக்காலத்தில் நடைபெற்ற மூன்று வேறு மகாநாடுகளின் நிகழ்ச்சிகட்குச் சாட்சியாயிருக்குஞ் சந்தர்ப்பமும் கிடைத்து விட்டது. இவற்றிற்கெல்லாம் என்னை அழைத்துச் சென்ற அன்பர்களுள் ஒருவர் யப்பானில் பார்க்கவேண்டிய இடங்களைப்பற்றிய, பிரயாண வசதிகள் விபரிக்கப்பட்ட நூலொன்றை (Tourist Guide Book) எனக்கு அன்பளிப்பாகத் தந்துதவினர். அதைத் திறந்து பார்த்ததும் அதிலடங்கிய ''மோட்டார் சாரதிகள் பிரார்த்தனை'' (Prayer for Motorists) எனக்கு அளவற்ற மகிழ்ச்சியை ஊட்டியது. இப் பேச்சை முடிக்குமுன் அதனை ஆங்கிலத்திலும் தமிழிலும் எடுத்துக் கூறி, எனது மகிழ்ச்சியை உங்களெல்லோருடனும் பங்கிட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

Teach us to drive through life without skidding into other people's business teach.

Preserve our brake lining that we may stop before we go too far.

Help us to hear the knocks in our own motors and close our ears to the clashing of other people's gears.

Absolve us from the mania of trying to pass the other motor car on a narrow road.

Open our eyes to the traffic signs, and keep our feet on the brakes.

பிறர் விஷயங்களில் தலையிட்டுப் பக்கஞ்சாய்ந்து விழாமல் வாழ்க்கை ரதத்தை ஓட்டிச்செல்ல கற்பிப்பாயாக!

வெகுதூரஞ் செல்லாமலே அதை நிற்பாட்டக்கூடியதாய் வேகமடக்கும் கருவியை நல்ல நிலையில் வைத்துக் காப்பாற்றுவாயாக!

சொந்த இயந்திரங்களின் சத்தத்தையே எங்கள் காதுகள் கேட்கவும் பிறர் ரதங்கள் போடும் சத்தங்கட்கு அவை செவிடாய் இருக்கவும் அருள்வாயாக!

ஒடுங்கிய பாதையில் முன்செல்லும் ரதத்தைத் தாண்டிச் செல்ல விரும்பும் பைத்தியக் குணத்திலிருந்து காப்பாற்றுவாயாக!

எங்கள் கண்கள் எப்போதும் பிரயாணக் குறிகளைக் கவனிக்கவும். கால்கள் வேகமடக்கும் கருவியில் தங்கி இருக்கவும் உதவுவாயாக!

இந்தப் பிரார்த்தனையானது இந்த நாட்டில் ஓடும் மோட்டார் ஒவ்வொன்றிலும் கொட்டை எழுத்தில் சாரதியின் பீடத்தின் முன் ஒட்டியிருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்?

உ

# இன்புற்றுவாழும் வழி.

(ஸ்ரீ சுவாமி சிவானந்தா அவர்கள்)

**மக்களாயுள்ள நாங்கள் ஒவ்வொருவரும் இன்பத்தை நாடுகின்றோம். துன்பத்தை அனுபவிக்க எவரொருவர்தானும் விரும்புவதில்லை. தூய இன்பமே எல்லா உயிர்களுக்குமுள்ள ஒரே நோக்கமாகும்.**

உண்மையான இன்பம் எது? அதை எங்கே பெறலாம்? எப்படிப்பெறலாம்? இக்கேள்விகள் பற்றி எப்பொழுதாயினும் நீங்கள் சிந்தித்ததுண்டா? இக்கேள்விகளுக்கு விவேகமான மறுமொழிகள் காணவிட்டால் உங்களைத் துன்பம் எப்பொழுதும் தொடர்ந்துகொண்டேயிருக்கும்.

## இன்பமடைதற்குத் திறவுகோல்

அன்புள்ள நண்பர்களே! உண்மையான இன்பம் சாதாரண சடப் பொருள்களில் மாத்திரம் காணப்படுவதில்லை. உலகப் பொருள்கள் நிலையற்றவையாய் மாறுந்தன்மையுடையவையாயிருப்பதனால் உண்மையான நிலையான இன்பத்தை அவை தரமாட்டா. பல உயிர்கள் வாழும் இவ்வுலகில் நீங்களும் பிராணிகளாகவேயிருக்கின்றீர்கள். நீங்கள் நிலையாய் வசிப்பது கடவுளிடத்திலேயேயாகும். எல்லையில்லாத அறிவும், இன்பமும், சமாதானமுமாயிருக்கின்றார் கடவுள். இந் நிலவுலகிலுள்ள எல்லாப் பொருள்கள் மூலமும் பெறமுடியாத இன்பத்தை நீங்கள் கடவுளிடத்திற் பெறக்கூடியதாயிருக்கும். கடவுள் தொடர்பு பூணுங்கள். நிலையான இன்பத்தையடைதற்கு அதுவே நிச்சயமான வழி. ஆகையினாலே கடவுளைக் காண முயலுங்கள். அகத்திலே ஐக்கியப்பட முயலுங்கள். கடவுளின் திருவுள்ளத்தின்படி ஒழுகப் பழகுங்கள். உங்களை அவருக்கு ஒப்புக்கொடுங்கள். இதுவே, உண்மையாய் இலகுவானதும், ஆனால் மிகக் கடினமானதுமாயுள்ள வழியாகும். ஒவ்வொருவருடைய இன்பத்துக்கும் சமாதானத்துக்கும் இதுவே திறவு கோலாகும்.

## மக்கட் பிறவியின் நோக்கம்

அகத்திலே இறைவனுடன் ஐக்கியப்பட்டு வாழும் வாழ்க்கையானது, இவ்வுலகிலே யடையப்பெறும் தெய்வீக வாழ்க்கையாகும். இறைவனுடன் ஐக்கியப்பட்டிருக்கும் நிலைமை நீங்கும்போது, உங்கள் வாழ்க்கை அமைதியின்றித் துன்பமயமானதாகின்றது. இழந்த இன்ப நிலைமையை அடைதற்கு உதவுவதே தெய்வீக வாழ்க்கையின் நோக்கமாகும். உண்மையான சமயம் ஒவ்வொன்றின் நோக்கமுமாகும், மக்கட்பிறவியின் நோக்கம் இறைவனுடன் ஐக்கியப்பட்டு இன்பமனுபவிக்கும் இந்த வாழ்க்கையை யடைதலேயாம்.

இறைவனுடன் ஐக்கியப்பட்டு இன்புறுதற்கு, நிச்சயமான மிக இலகுவான வழியை இங்கே உங்களுக்குச் சொல்லுகின்றேன். கடவுளின் பிள்ளைகளே! கேளுங்கள்; கோயில்களில் மாத்திரம் கடவுளிருக்கிறாரென்று கருத வேண்டாம். அவர் எங்கும் வியாபகமாயிருக்கின்றார். ஒவ்வொரு உயிரின் அகத்திலும் அவர் வசிக்கின்றார். இறைவனுடைய ஒளி ஒவ்வொரு உயிரினிடத்தும் மறைந்திருக்கின்றது. ஆகையினாலே, ஒவ்வொரு உயிரினிடத்தும் இறைவனைத் தரிசிக்கப் பழகுங்கள். நீங்களே இறைவன் எழுந்தருளியிருக்கும் நடமாடும் திருக்கோயிலாயிருக்கின்றீர்கள்.

## இறை தரிசனத்துக்குச் சாதனை

இறைவனை இவ்வாறு தரிசித்தற்குச் சாதகமாகுமாறு, நீங்கள் தூயவர்களாய், சத்தியசீலர்களாய் தாழ்மை, அன்பு, இரக்கம். உடையவர்களாய் வாழுங்கள். இந்நடமாடும் திருக்கோயிலைப் புனிதமாய் வைத்திருங்கள். அப்படிச் செய்யும் பொழுது இறைவனது ஒளியை உள்ளே காண்பீர்கள். அப்படிக் காணும்பொழுது, மனத்தாலும், வாக்காலும், காயத்தாலும் மற்றவர்களும் தெய்வீக வாழ்வு வாழ நீங்கள் இயல்பாகவே ஊக்குவித்து நிற்பீர்கள். அப்பொழுது எல்லையில்லாப் பேரின்பம் உங்களுடையதாகும். அன்பர்களே, இத்தன்மையதாகிய தெய்வீக வாழ்க்கை வாழ்ந்து நீங்கள் என்றென்றும் இன்புற்றிருப்பீர்களாக. இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. எல்லா நலன்களையும் உங்களுக்கு அருளுவாராக.

# ★ வழிகாட்டும் ஜோதி ★

(செல்வி. கோமதி சுப்பையா)

**கந்தப்பெருமான்!** ஆம். அவரை நம்மில் எத்தனை யோ பேர் இஷ்ட தெய்வமாக வணங்குகிறோம். அவனை வழி படுபவருக்குத்தான் அவன் மீது எத்தனை அன்பு. அப்படி அவனிடம் என்னதான் கவர்ச்சி இருக்கிறதோ? அந்தக் கந் தனிடம் உண்மையிலேயே ஒரு சுகந்தம் வீசுகிறது. அந்த ஆனந்தமான சுகந்தம் தான் நம்மை அவனிடம் இழுத்துச் செல்கிறதோ! உள்ளன்போடு அவனை ஒரு நிமிடம் நினைத் தால் உடனே தன் மயில்வாகனத்தின் மீதேறி நம்மிடம் வந்து விடுவான். அவனுக்குப் பெயர்கள் ஒன்றா? இரண்டா? அநந்தம்! முருகன் அவரின் இன்னொரு திருநாமம். முருகு என்றால் அழகு. அவனே அழகின் சொரூபம். அந்த அழ கிலே மயங்காதார் யாருமே கிடையாது: இப்படி மனிதரை மயக்கித் தன்னிடத்துக் கவரும் காந்த சக்தி அந்தக் கந்தனி டம் தான் உண்டு. அப்படி அவனிடம் இழுத்துச் செல்லப் பட்டவரில் **அருணகிரியும்** ஒருவர். அவரை அறியாமலே பாட்டு அவர் வாயிலிருந்து நழுவிவிட்டது. ஆம்! கந்தரனுபூதி அப் படித்தான் நமக்குக் கிடைத்தது.

கந்தரனுபூதி ஒரு மந்திர நூல். அதிலுள்ள ஒவ்வொரு பாக்களும் ஒவ்வொரு மந்திரத்துக் கொப்பானவை. அம் மந் திரங்களை **மாத்ருகா** மந்திரம் என்பார்கள். அம் மாத்ருகா மந் திரங்களாகிய ஐம்பத்தொரு மந்திர மலர்களை அன்பு என்ற நாரினால், நாவிலே அழகாக, மனம் என்ற தாமரைப் பூவைக் குஞ்சமாக நடுவே அமைத்து மாலையாகத் தொடுத்து, அதில் ஞானம் என்ற நறுமணங் கமழவும், மாசில்லாத புத்தி என்ற வண்டு பாடவும் அமைத்து, அம்மாலையை ஆறுமுகப் பெருமா னின் அடிமலர்கட்கு அணிவிக்க வேண்டும். மந்திர மாலை தொடுக்கும் விதியை பரம குருநாதர் அருணகிரியார் கூறு கின்றார்.

"ஆசை கூர் பத்தனென் மனோ பத்ம
மான பூ வைத்து நடுவே யன்
பான நூலிட்டு நாவிலே சித்ர
மாகவே கட்டி ஓரு ஞான
வாசம் வீசிப்ர காசியா நிற்ப
மாசிலோர் புத்தி அளிபாட
மாத்ருகா புஷ்ப மாலை கோலப்ர
வாள பாதத்தில் அணிவேனோ"

இந்தத் திருப்புகழின் படி தொடுத்த மந்திர மாலைதான் கந்த ரனுபூதி.

முதலில் கர்ம முதல்வனைத் துதிக்கிறார். எல்லோரும் அவரைத்தான் முதலில் துதிக்க வேண்டுமென்றால் அருணகிரி மட்டும் அதற்கு விதி விலக்கா? முருகனுக்கு அவர் மூத்தவர் தானே!

"நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருகத்
தஞ்சத் தருள் சண்முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனை மாலை சிறந்திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்"

அடியார்கள் தங்களது கல்லினும் கடினமான நெஞ்சம் உருக வழிபட்டவுடனே அவர்களுக்கு இரங்கி அருளும் முருகப் பெருமானுக்காக இயற்றும், அழகிய சொற்கள் நிறைந்த இக் கவி மாலை சிறக்க விநாயகக் கடவுளின் திருவடிகளைப் பணிவோமாக! விநாயகரைத் துணைக்குக் கூப்பிட்ட பிறகு எதற்காவது அவர் வராத சந்தர்ப்பங்கள் உண்டா?

"யானை முக அசுரனைப் போர்க்களத்தில் கொன்று தள்ளிய ஒப்பற்ற யானைமுகனின் தம்பியே! எப்பொழுதும் உன் வேலையும், கொடியையும், சேவலையும், உன்னையும் புகழ்ந்து பாடித் துதிப்பதையே எனக்குப் பணியாக நீ அருள்வாய்" என்று பொருள்பட முருகனை நோக்கி,

"ஆடும் பரிவேலணி சேவலெனப்
பாடும் பணியே பணியா யருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோதரனே."

அறிவத்தனையும் மறைத்து உலகில் மூழ்கச் செய்கின்ற மாயையை துணித்திரையைக் கிழித்து எறிவதைப்போல உங்களது ஞான உபதேசத்தால் அந்த மாயைத் திரையைக் கிழித்தெறிய வல்ல பெருமானே! ஆறுமுகத்தாலும் உய்யும் மார்க்கத்தை எனக்கு உபதேசிப்பாய். அப்படியிருந்தும் மனைவி, வீடு, மக்கள் என்ற பந்தங்களிலிருந்து எனக்கு விடுபட முடியவில்லையே.

"மகமாயை களைந்திட வல்ல பிரான்
முகமாறு மொழிந்து மொழிந்திலனே
அகமாடை மடந்தைய ரென்றயருஞ்
சகமாயையுள் நின்று தயங்குவதே."

என்று முருக வேளிடம் அழுது முறையிடுகிறார். கட்டாயம் தீர்ப்பார், முருகன்.

மார்க்கண்டேயனுக்கு மட்டும் தானா காலனை உதைப்பார். நமக்கும் எமனை ஒழிப்பார். ஆதலால் எமன் வருங்காலத்து முருகக் கடவுளை நோக்கி, "கடப்ப மாலையைத் தரித்தவனே! என் உயிரைக் கவருதற்காக 'கார்மா' வாகிய எருமைக்கடா மீது எமன் ஆரோகணித்து வரும்போது உன் மயில் மீது ஏறி வந்து எனக்கு தரிசனம் அளிப்பாய். அதனால் என் மரண பயத்தை ஒழிப்பாயாக" என்று அவனிடம் மன்றாடிக் கெஞ்ச வேண்டும். அருணகிரி ஆறுமுகனைக் கேட்கின்றார்.

"கார்மா மிசைகாலன் வரிற் கலபத்
தேர்மா மிசை வந்தெதிரப் படுவாய்
தார்மார் பவலாரி தலாரி எனும்
சூர்மா மடியத் தொடும் வேலவனே."

முருகனே! மயில் வாகனனே! சூரனை அழித்த வேலை யுடையவனே! யான் ஒன்றையும் நினைத்தலும் மறத்தலும் இல்லாத நிர்விகல்ப நிஷ்டையை அடைய விரும்பினேன். அதனை உணர்தற்குக் காரணமாகிய செந்தாமரை மலர் போன்ற உனது திருவடித் தியானத்தைப் புரியும் விதத்தை உடனே உபதேசிப்பாயாக!

"கருதா மறவா நெறி காண எனக்
கிருதாள் வன சந்தர வென்றிசைவாய்
வரதா முருகா மயில்வாகனனே
விரதா சுரசூரவி பாடனனே."

அருணகிரியைப் போலவே நாமும் அவன் திருவடியே தஞ்சமென, அதை அவன் உபதேசிக்கும் வரைக்கும் இறுக்கிப் பற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

ஒரு காலத்தில் பிரம்மா, "பிரணவப் பொருள் என்றால் என்ன?" என்று விளங்காமல் நின்றார். அதைக்கண்ட முருகன் கோபித்து அவரைச் சிறைக்கு அனுப்பி விட்டார். அதற்கு சிவபெருமான், "நீ உரைப்பையோ," என்று மகனை நோக்கி வினவினார். முருகக்கடவுள் உரைக்க இசைந்தனன். பிரணவப் பொருள் விளங்கிக் கொள்வது என்பது உபதேசம் பெறுவதாதலின் சிவன் முருகனை சற்குருவாகக் கொண்டு, ஐதீக முறைப்படி, நாதா !, குமரா !!, நம !!! என்றார். உடனே சுப்பிரமணியரும், "ஓம்," என்றுரைத்து அதன் பொருள் விளக்கினா. அதனாற்றான் சண்முகற்கு, சற்குரு என்ற பெயர் வழங்குகிறது. "சிவபெருமானுக்கு உணர்த்தினையே, அதே "ஓம்" என்ற பிரணவத்தை எனக்கும் உணர்த்துவாயாக!" என்று,

"நாதா, குமரா நம என்றரனு
ரோதா யென வோதிய தெப் பொருள்தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பத சேகரனே,"

என்று வழுத்த வேண்டும்.

இவ்வளவு காலமும் உன் அடியார் கூட்டத்தை என் நெஞ்சகம் விரும்ப வில்லை. இனிமேல் விரும்பும். ஆதலால் என் மனத்தகத்தே முளைத்திருக்கும் நாற்றுக்களாம் அகந்தை, மமதையை களைந்து விடுவாய்,"

"சிரிவாய் விடுவிக்கிரமவே லிறையோன்
பரிவாரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
லரிவா யடியோடு மகந்தையை யே,"

என்று கண்ணீராற்றுப் பெருக்கி, பக்தி என்னும் கத்தியை அவருக்குக் கொடுக்க வேண்டும்.

அருணகிரி நாதர் உலகத்தில் பிறந்துழலும் அடியார் கூட்டத்திற்கு பிறவிப் பிணி நீங்க நல்ல மருந்து தயாரித்து வைத்திருக்கிறார். பிறவிப் பிணிக்கு நல்ல மருந்து இக் கந்த ரனுபூதி. இந்த அரிய பெரிய மருந்தை தாயுமானவர் பாராட்டு கின்றார்.

"கந்தரநுபூதி பெற்றுக்
கந்தரனுபூதி சொன்ன
எந்தையருள் நாடி
பிருக்கு நாள் எந்நாளோ"

கந்தரனுபூதியிலுள்ள ஒவ்வொரு பாக்களும் ஒவ்வொரு ரத்தி னங்கள். அதினின்றும் எப்பொழுதும் நமக்கு 'வழி காட்டும் ஜோதி" யாக ஜோதி வீசிக்கொண்டே இருக்கும். அவை ஒவ் வொன்றும் இறைவனை வழுத்த ஏற்ற பாக்கள். அந்த ஒவ் வொரு இரத்தினத்தையும் நம் 'இதயம்' என்னும் இரும்புப் பெட்டியினுள் பூட்டிப் போற்றி வைப்போமாக!



# ரிஷிகேசம் தெய்வீக வாழ்க்கைச் சங்க வெள்ளிவிழா

## நாம லிகித ஜெபம்.

**ஓகஸ்ட் மாதம் முடிய உள்ள கணக்கு விபரம்.**

| | |
|---|---|
| யூலாய் மாதக் கணக்கு | 6262308 |
| கொக்குவில் | 1232 |
| யாழ்ப்பாணம் | 35135 |
| திருமலை | 16981 |
| மாத்தளை | 13735 |
| பண்டாரவளை | 3677 |
| றத்தோட்டை | 1120 |
| நாவலப்பிட்டி | 163316 |
| கொத்மலி - பார்க்கோபில் | 88496 |
| வட்டக்கொடை | 2268 |
| பளை | 3850 |
| மட்டக்களப்பு | 2128 |
| உடுப்பிட்டி | 60000 |
| சாவகச்சேரி | 2071 |
| கம்பளை | 5280 |
| தெல்லிப்பளை | 23140 |
| மூதூர் | 57213 |
| பருத்தித்துறை | 10275 |
| பதுளை | 1601 |
| காரைநகர் - குருகுல இல்லம் | 225700 |
| காலி – எல | 4709 |
| மாவிட்டபுரம் | 13800 |
| கொழும்பு | 31200 |
| காங்கேசன் துறை | 12600 |
| வல்வெட்டித்துறை | 15120 |
| இரத்தினபுரி - லேன்டவுன் தோட்டம் | 389090 |
| நோட்டன் - கிரிவான் எலியா | 15120 |
| கினிகத்தனே - அல்லி தோட்டம் | 18080 |
| மொத்தம் | 7479245 |

Registered at the G. P. O. as a News Paper M. L. 59-300


# வாய்வு சூரணம்.

உஷ்ணவாய்வு முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு, மலக்கட்டு, மலபந்தம், அஜீர்ணம், கை கால் அசதி பிடிப்பு, பசியின்மை, வயிற்று வலி, பித்த மயக்கம், பித்த சூலை, புளியேப்பம், நெஞ்சுக் கருப்பு, முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரண சக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச் சிறந்த சூரணம்.

## உபயோகிக்கும் முறை.

இந்தச் சூரணத்தில் அரை தோலா அளவு எடுத்து அத்துடன் அரை தோலா அளவு சீனி அல்லது சர்க்கரை கலந்து ஆகாரத்துக்குமுன் உட்கொண்டு கொஞ்சம் வெந்நீர் அருந்தவும். காலை மாலை தொடர்ந்து உட்கொள்ள வேண்டும். தேகத்தை அனுசரித்து உட்கொண்டு வரும்போது அளவைக்கூட்டியும் குறைத்தும் உட்கொள்ளலாம். நெய், பால், வெண்ணெய், நிறையச் சாப்பிடலாம். வாரம் ஒரு முறை எண்ணெய் ஸ்நானம் செய்யலாம்.

மூலிகையினால் தயாரிக்கப் பெற்றது.

தபால் செலவு உட்பட டின் ஒன்று 4 ரூ 25 ச

இலங்கையில் கிடைக்குமிடம்

**ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி.**

இந்தியாவில் கிடைக்கும் இடம்:-

**சம்பு இன்டஸ்ரீஸ் சேலம் 2. (S.I.)**

மலாயாவில் கிடைக்குமிடம்:-

**மு. கணபதி அன் கம்பெனி**

66, பெல்பீல்ட் ஸ்ரீட் ஈப்போ.


---

# சந்தா நேயர்களுக்கு

இம்மாதம் தொடக்கம் ஆத்மஜோதியின் புதுவருடச் சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும். ஆத்மஜோதி அன்பர்கள் அனைவரும் ஒக்டோபர் மாதம் 15-ஆம் தேதிக்கிடையில் புதுவருடச் சந்தா உட்பட தமது சந்தாப் பாக்கிகளை அனுப்பிவைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். பணம் அனுப்பும்போதும் விலாச மாற்றம் செய்யும்போதும் சந்தா இலக்கத்தைத் தவறாது குறிப்பிடுக.

இந்தியாவில் உள்ள அன்பர்கள் வழக்கம் போல

**R. வீரசம்பு, சம்பு இன்டஸ்ரீஸ், சேலம் 2.**

என்ற விலாசத்திற்கு அனுப்பிவைப்பதோடு

இவ்விடமும் அறியத்தருக

**ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி (சிலோன்)**

Printed & Published by Mr. N. Muthiah,
"Athmajothi" Nilayam, Nawalapitiya.
at RAJAH PRESS, Theatre Road, Nawalapitiya, (Ceylon.) 16-9-60